**தலைப்பு 242 - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 242 - முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட:டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்பாட்டு குத்தகை முறைமையில் கொள்வனவு செய்த வாகனத்திற்காக தவணைப் பணத்தை செலுத்துவதற்காக வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாடு வழங்கப்படாது அதற்காக நி.பி 66 இன் கீழ் ரூபா 3,000,000 நிதி ஏற்பாட்டினை மாற்றி அதில் ரூபா 2,710,399 தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. | நாட்டில் காணப்பட்ட பாதகமான பொருளாதார சூழ்நிலையின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட குத்தகை வாகன கொள்வனவிற்காக 2023 ஆம் ஆண்டிற்காக நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அந்த ஆண்டில் திணைக்களத்தின் வாகன தேவைப்பாட்டினைப் பூர்த்திசெய்வதற்காக நிதி அமைச்சின் மூலம் வாகனம் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அமைச்சின் மூலம் உரிய செலவுகளை | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் வருடாந்த செலவு மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளுமாறு வழங்கிய அறிவுறுத்தலின் பிரகாரம் நி.பி 66 இன் பிரகாரம் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டது. | |
| (ஆ) | செலவு விடயம் 242-1-1-0-1102 இற்காக நி.பி 66 இன் மூலம் ரூபா 500,000 நிதி எற்பாடு மாற்றப்பட்டு அவற்றில் ரூபா 18,752 மாத்திரம் செலவு செய்து ரூபா 431,248 அல்லது 86 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | நி.பி 66 இன் கீழ் தேவையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அமைச்சின் மூலம் அந்த பயிற்சி சந்தர்ப்பம் அங்கீகரிக்கப்படாமையின் அடிப்படையில் நிதி எற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| **(அ)** | **தரவு முறைமைகளைப் பேணுதல்** | | |
| | திறைசேரி செயலாளரினதும் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செயலாளரினதும் DMS/E/1/99 ஆம் இலக்க 1999 மே 05 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் தோற்றுவிக்கப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முதலாவது நடவடிக்கையாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குள் பொதுத் தரவு மூலத்தினைத் தோற்றுவிப்பதற்கு மற்றும் பல்வேறு முகவர் நிறுவனங்களுக்கிடையே ஒழுங்கற்ற முறையில் பரந்து காணப்படும் தரவுகளை | தற்பொழுது திணைக்கத்தினால் பேணப்பட்டு வருகின்ற அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான ஆளணியினர் தொடர்பாக விரிந்ததாள் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அனைத்து தரவு அறிக்கைகளும் கணனிமயப்படுத்தப்பட்ட தரவுக் குளாம் முகாமைத்துவ முறைமையினூடாக நிறைவேற்றப்படுவது சம்பந்தமான தொடக்க செயற்பாடுகள் தகவல் தொழில்நுட்ப | தாமதமின்றி திட்டங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கீழ் ஒன்று திரட்டி நாளதுவரையாக்கி மையப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக அரசாங்க துறையின் மற்றும் மாகாண அரசாங்க சேவை ஊழியர்கள் தொடர்பான தகவல் முறையை பேணுகின்ற தேவைப்பாடு அடையாளங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திணைக்களம் தோற்றுவிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதிவரை 24 ஆண்டுகள் காலம் கடந்திருந்ததும் தரவு முறைமை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ திணைக்களத்தினால் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |

**(ஆ) அரசாங்க துறையின் ஆளணியினர் தகவல்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல்**

| | | |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களின் உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்ளல், இராஜினாமாகச் செய்தல், சேவையை கைவிட்டுச் செல்லல், சேவையிலிருந்து இடைநிறுத்தல், ஓய்வுபெறுதல், மரணமடைதல் போன்ற விடயங்கள் தொடர்பாக இடம்பெறுகின்ற மாற்றங்களைக் காட்டி அரசாங்க துறையிலுள்ள ஆளணியினர் தொடர்பான காலாண்டு ரீதியாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தும் 2019 | அமைச்சரவைக்கு கலாண்டு ரீதியாக அறிக்கையைச் சமர்ப்பித்தல் நடைமுறைச் சாத்தியம் அற்றது என்பதனால் வருடாந்தம் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு இந்த ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்லத் வேண்டும். |

ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் பின்னர் உரிய ஆளணித் தகவல்கள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) உள்ளபடியான ஆளணித் தகவல்களைப் பேணுதல்**

2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க அனைத்து அரசாங்க நிறுவனங்களும் உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல், இராஜினாமாச் செய்தல், சேவையை விட்டுச் செல்லல், செவையிலிருந்து இடைநிறுத்துதல், ஓய்வு பெறுதல், மரணடைதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக இடம்பெறுகின்ற மாற்றங்களைக் காட்டி அரசாங்க துறையின் ஆளணியினர் தொடர்பாக தரவு முறைமையைப பேணுதல் மற்றும் நாளதுவரையாக்கும் பொறுப்பு திணைக்களத்திற்கு ஒபபடைக்கப்பட்டிருந்தும் நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையைத் தயாரிக்கும் போது அரசாங்கத்தின் 32 தொழில் முயற்சி நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் விசேட செலவு பிரிவுகள் தொடர்பான 52 நிறுவனமாக மொத்தமாக 84 நிறுவனங்களில் காணப்படுகின்ற ஆளணியினரின் விபரங்களை உள்ளடக்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2022 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையைத் தயாரிக்கும் போது உள்ளடக்கப்படாதுள் ஆளணித் தகவல்களானது மொத்த அங்கீகரித்த ஆளணியில் 0.6% ஆன சிறிய சதவீதம் ஆனதுடன் அந்த நிலைமையை சரிசெய்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அறிக்கைக்கான தரவுகளை முழுமையாகச் சமர்ப்பிப்தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| (ஈ) 2017 சனவரி 21 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களின் செயற்பாடுகளை சிறந்த மட்டத்தில் பேணுவதற்குத் தேவையான ஆகக் குறைந்த ஆளணியினரை அடையாளங்கண்டு அது தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுவதற்கும் அதத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஆளணி மீளாய்வுக் குழுவின் மூலம் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தேவையான சிறந்த ஆளணியினைத் தீர்மானிப்பதற்கும் நிர்ணிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் சுற்றறிக்கை வழங்கப்பட்டு 05 ஆண்டுகளை மிகைத்திருந்தும் 1027 அரசாங்க நிறுவனங்களுக்கு மத்தியில் 765 நிறுவங்களின் ஆளணி மீளாய்வு அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது. | அரசாங்க துறையின் நிறுவனரீதியான ஆளணி மீளாய்வானது இத்திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான செயற்பாடு என்பதனால் ஆளணி மீளாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய நிறுவனங்களை அடையாளங்கண்டு ஆளணி மீளாய்வினை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காட்டப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு இணங்க திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு இணங்க ஆளணி மீளாய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அரசாங்க நிறுவனங்களுக்கு அரசாங்க இயலத்திரனியல் பெறுகை முறைமையினை அறிமுகப்படுத்துதல் தொடர்பான 2018 ஒக்தோபர் 23 ஆந் திகதிய 05/2018 ஆம் இலக்க மற்றும் 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் சந்தை | 2024 ஆம் ஆண்டிலிருந்து இலத்திரனியல் பெறுகை முறைமையினை பயன்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

விலை நிர்ணய முறைமைக்கு பெறுகைகளை மேற்கொள்ளும் போது இலத்திரனியல் பெறுகை முறைமை பயன்படுத்த வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் திணைக்கத்தினால் 2023 ஆம் ஆண்டின் போது இலத்திரனியல் பெறுகை முறைமை பயன்படுத்தப்படாது 03 சந்தர்ப்பங்களின் போது மொத்தமாக ரூபா 798,973 தொகையான பொருட்கள் சந்தை விலை நிர்ணய முறைமைக்கு வழங்கப்பட்டிருந்தது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வாகனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் மார்ச் 04 ஆந் திகதி விபத்துக்குள்ளாகிய KE-6438 ஆம் இலக்க வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக ரூபா 61,959.58 பணத்தை அறவீடு செய்வதற்காக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை நிர்ணயித்தல் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் இடம்பெற்றிருக்கவில்லை. | விபத்து தொடர்பான பொலிஸ் பரீட்சிப்பு அறிக்கை வழங்கப்பட்டிருக்காததனால் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து உரிய பணத்தை அறவீடு செய்வதற்கு இதுவரை முடியாதிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரும் உள்ளபடியான ஆளணியினரும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரித்த பதவிகள் 94 ஆக இருந்ததுடன் அவற்றில் 19 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அவற்றில் சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகள் 12 ஆகவும் இரண்டாம் மட்டத்திலுள்ள பதவிகள் 05 ஆகவும் ஆரம்ப மட்டத்திலுள்ள பதவிகள் 02 ஆகவும் இருந்தன. | கடந்த சில ஆண்டுகளில் அரசாங்க சேவைக்குச் சேர்த்துக்கொள்ளுதலினை மட்டுப்படுத்தியதன் காரணமாக காணப்பட்ட ஊழியர் பற்றாக்குறையின் அடிப்படையில் தொடர்ந்து வரும் உத்தியோகத்தர்களை தேடிக் கண்டுபிடித்தல் சிக்கலாக உள்ளது. | திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக அத்தியவசியமான பதவிகளை நிரப்புவதற்கும் அவ்வாறு இல்லாத பதவிகள் காணப்படுமாயின் அவற்றை அங்கீகரித்த |

| | |
|---|---|
| எவ்வாறாயினும் சில பதவிகள் சம்பந்தமான தேவைப்பாட்டினை மேலும் கவனித்துப்பார்த்து திருத்தம் செய்ய வேண்டிய பதவிகளை அடையாளங்கண்டு அப்பதவிகளை 2024 ஆம் ஆண்டின் போது குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆளணியில் திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |